| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.பில்., எம்.எட்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை–600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள் |

**ந.க.எண். 052449/பி1/2019** **நாள் : 03.05.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வு ஜூன் 2019 – விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக்குறிப்பு வெளியிட வேண்டுதல் – சார்பு.

*********

நடைபெற்று முடிந்த மார்ச் 2019 பொதுத்தேர்விற்கு விண்ணப்பித்து, வருகைபுரியாதவர்கள் / தேர்ச்சிபெறாதவர்கள் வரும் **14.06.2019 அன்று தொடங்கி 22.06.2019 வரை** நடைபெறவிருக்கும் ஜூன் 2019, பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வெழுத, பள்ளிகள் / தேர்வு மையங்கள் மூலம் ஆன்–லைனில் விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள், விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தனித் தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு**

1. செய்திக்குறிப்பு
2. தேர்வுக் கால அட்டவணை

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   – தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி, மாணவர்களை அனுமதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள் – மேற்படி விவரத்தினை தங்கள் உள்ளூர் செய்தித்தாட்களில் செய்தியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6</u>**

**<u>பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வு ஜூன் 2019</u>**

**<u>தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்</u>**

**<u>செய்திக் குறிப்பு</u>**

நடைபெற்ற மார்ச் 2019, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு விண்ணப்பித்து வருகைபுரியாதவர்கள் / தேர்ச்சிபெறாதவர்களுக்காக **<u>14.06.2019 (வெள்ளிக்கிழமை) முதல் 22.06.2019 (சனிக்கிழமை) வரை</u>** நடைபெறவுள்ள ஜூன் 2019, பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் மட்டுமே ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள்/ தேர்வு மையங்களுக்கு நேரில் சென்று **<u>06.05.2019 (திங்கட்கிழமை) பிற்பகல் முதல் 10.05.2019 ( வெள்ளிக்கிழமை) வரை</u>** ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

- **தனியார் Browsing Centre-கள் மூலம் விண்ணப்பிக்க இயலாது.**

**<u>தேர்வுக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை</u> :-**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 2. | ஆன்–லைன் பதிவு கட்டணம் | ரூ.50/– |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.175/–** |

தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்–லைன் பதிவுக்கட்டணம் ரூ.50/– சேர்த்து மொத்தம் ரூ. 175/–ஐ ஆன்–லைனில் விண்ணப்பிக்கும் பள்ளிகள்/தேர்வு மையங்களிலேயே பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்</u> :–**

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும். தேர்வர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்.

தேர்வர்களுக்கு தேர்வெழுத தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஓம்/–

**இயக்குநர்**

**இடம் :** சென்னை – 600 006

**நாள் :** 03.05.2019

**DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS**

**SSLC SPECIAL SUPPLEMENTARY Exam June 2019**

**Time Table**

**Examinations Commence at 10.00 a.m. ends at 12.45 p.m.**

| | |
|---|---|
| 10.00. a.m. to 10.10. a.m. (F.N) | Reading the Question Paper |
| 10.10 a.m. to 10.15. a.m. (F.N) | Verification of Particulars by the Candidates |
| 10.15 a.m. to 12.45 p.m. (F.N) | Duration of the Examination |

| Date | Day | Subject | |
|---|---|---|---|
| 14.06.2019 | Friday | Part - I | Tamil Paper - I |
| 15.06.2019 | Saturday | Part - I | Tamil Paper - II |
| 17.06.2019 | Monday | Part - II | English Paper - I |
| 18.06.2019 | Tuesday | Part - II | English Paper - II |
| 19.06.2019 | Wednesday | Part - III | Mathematics |
| 20.06.2019 | Thursday | Part - III | Science |
| 21.06.2019 | Friday | Part - III | Social Science |
| 22.06.2019 | Saturday | Part - IV | Optional Language |

Sd./-
DIRECTOR

Place: Chennai
Date : 01.04.2019.